


திருவாரூர் மாவட்ட சட்டமன்றத் தொகுதிகளின் வாக்குச்சாவடி நிலைமுகவர்கள் ஆலோசனைக் கூட்டம், திருச்சி மண்டல பொறுப்பாளரும், நகராட்சி நிர்வாகத்ததுறை அமைச்சருமான கே.என்.நேரு தலைமையில் நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தேர்தல் பொறுப்பாளர்கள் எஸ்.கே.வேதரத்தினம், ஜெகவீரபாண்டியன், ராஜாசீனிவாசன், சௌமியன் வைத்தியநாதன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பி. ராஜமாணிக்கம், ப. ஆடராசன், மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையா மங்களம் ஜி.பாலு, அவைத்தலைவர் க.தன்ராஜ், மாவட்ட துணை செயலாளர்கள் எம்.எஸ். கார்த்திக், எம்.ராமகிருஷ்ணன், சாந்தி பாஸ்கர், மு. வெங்கடேசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### அமைச்சர் எ.வ.வேலு தலைமை! ஒருங்கிணைந்த சேலம் மாவட்டத்தில்

# தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### அமைச்சர் ஆர்.இராஜேந்திரன் – எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. – டி.எம். செல்வகணபதி எம்.பி. வேண்டுகோள்!





சேலம், நவ.5-

சேலம் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் இரா.இராஜேந்திரன், கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி., மேற்கு மாவட்டச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

10.11.2025 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு சேலம் 5 ரோடு கே.எம்.பி. திருமண மண்டபத்தில், பொதுப்பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் எ.வ.வேலு அவர்கள் தலைமையில் கெங்கவல்லி, ஆத்தூர், ஏற்காடு, வீரபாண்டி, சேலம் மேற்கு, சேலம் வடக்கு, சேலம் தெற்கு, ஓமலூர், மேட்டூர், சங்ககிரி மற்றும் எடப்பாடி ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் பொறுப்பேற்றுள்ள பகுதி பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்களின் ஆலோசனை கூட்டம் நடைபெறவுள்ளது.

எனவே இக்கூட்டத்திற்கு 11 சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட பகுதி பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டுமென அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

### கழக மூத்த முன்னோடி

# திருவாரூர் சுப்புணி என்கிற சுப்பிரமணியன் மறைவு!

### பூண்டி. கே. கலைவாணன் உள்ளிட்ட கழகத்தினர் அஞ்சலி!

திருவாரூர்,நவ.5-

தி.மு.க. தொடக்க கால உறுப்பினரும்,கழக செயல் மறவருமான சுப்புணி என்று அன்போடு அழைக்கப்பட்ட திருவாரூர் எம். சுப்பிரமணியன் அவர்கள் காலமானார். திருவாரூர் மேலவடம்போக்கி தெருவில் வசித்த வந்த சுப்பிரமணியன் கழகத்தின் ஆரம்ப கால உறுப்பினராவார், கழகத்தின் மீது கொண்ட பற்றினால் இவர் 1974ம் ஆண்டிலேயே பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரால் தனது சொந்த நிதியில் பொதுமக்களுக்காக பேருந்து நிலையம் அமைத்தவர். முத்தமிழ் அறிஞர் கலைநகர் அவர்களிடத்தில் அதிக அன்பு கொண்டு பழகி வந்தவர்.

மறைந்த சுப்பிரமணியம் அவர்களுக்கு ராஜேந்திரன், வால்கா சேகர், வால்கா ராஜா ஆகிய மகன்கள் உள்ளனர். அன்னாரது மறைவின் தகவல் அறிந்த மாவட்ட கழக செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ., நகர செயலாளர் வாரை . எஸ். பிரகாஷ், ஒன்றிய செயலாளர் புளிவலம் ஏ . தேவா மற்றும் கழக நிர்வாகிகள் அன்னாரது இல்லத்திற்கு நேரடியாகச் சென்று மறைந்த சுப்பிரமணியன் அவர்களது உடலுக்கு மலைவலையம் வைத்து இறுதிமரியாதை செலுத்தி அவரை இழந்து வாடும் குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினர்.

மறைந்த சுப்பிரமணியம் அவர்களது இறுதி அஞ்சலி திருவாரூர் மேல வடம் போக்கி தெருவிலிருந்து புறப்பட்டு 03.11.2025 திங்கள் அன்று மாலை நல்லடக்கம் செய்யப்பட்டது.

# திருப்பூர் கிழக்கு - திருப்பூர் தெற்கு ஆகிய மாவட்டக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு

திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளராக பணியாற்றி வந்த மு.பெ.சாமிநாதன் அவர்கள் துணைப் பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்டதால், அவருக்குப் பதிலாக திரு. **இல.பத்மநாபன்** (நெ. 4/666, சைட் எண். 103, கிருஷ்ணா நகர், விவேகானந்தா வித்யாலயா பள்ளி எதிரில், தாராபுரம் சாலை, கோவில் வழி, திருப்பூர் 641608 ) அவர்கள் **திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளராகவும்;**

திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளராக பொறுப்பு வகித்து வந்த திரு. இல.பத்மநாபன் அவர்கள், திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதால், அவருக்குப் பதிலாக, திரு. **கே.ஈஸ்வரசாமி**, எம்.பி., (நெ. 1428ஏ, கருப்புசாமி புதூர், மைவாடி அஞ்சல், மடத்துக்குளம் தாலுக்கா, திருப்பூர் மாவட்டம்.) அவர்கள் **திருப்பூர்தெற்கு மாவட்டக்கழகப் பொறுப்பாளராகவும்** நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தந்த மாவட்ட நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018.
நாள்: 04.11.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



விளாத்திகுளம் வட்டம், புதூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் ரூ.74.22லட்சம் மதிப்பீட்டில் மூன்று வகுப்பறை கட்டிடங்கள் கட்டுவதற்கான பணியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயன் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்.நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் செல்வராஜ், மும்மூர்த்தி, சின்னமாரிமுத்து, இம்மானுவேல், பள்ளி தலைமையாசிரியர் (பொறுப்பு) கிருஷ்ணமூர்த்தி, வடக்கு மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் ஆகாஷ் பாண்டியன், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# ஆணவக் கொலைகளும் அதிகார வழிப்பறிகளும்!

## கணையாழி தலையங்கம்!

முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின்
இந்தியாவுக்கே முன்மாதிரியாக
"ஆணவக் கொலைகள் தடுப்புக்கான
சட்டமொன்றை இயற்றிட,
ஆணையம் அறிவித்திருக்கிறார்!

சூரனை வதம் செய்த முருகன்
மறுநாள் இந்திரன் மகள் தெய்வானையோடு
வள்ளியை இரண்டாவதாகத்
திருமணம் செய்துகொண்டதைத்
திருக்கல்யாணம் என்று
கொண்டாடுகிறார்கள் பக்தர்கள்!

வள்ளி,
வள்ளிக்கிழங்கு தோண்டும் இடத்தில்
கண்டெடுக்கப்பட்டவராம்!
வேடர்குலத் தலைவன்
நம்பிராசனின் வளர்ப்பாம்!

வள்ளி பிறந்த ஊர்
காஞ்சிபுரம் மேல்மாடி அருகே
வள்ளிமலை என்றும்
ஈழத்துக் கதிர்காமம் என்றும்
சொல்லப்பட்டாலும்
வேடர்குலப் பெண் என்பதில்
மாறுபட்ட கருத்து இல்லை!

குறவர் மடமகள் என்று
கொண்டாடுகிறது வள்ளியைத்
திருமுருகாற்றுப்படை!

முருகனின் சாதி கடந்த
காதல் திருமணத்திற்கு
அப்பா கடவுள், அம்மா கடவுள்
அண்ணன் கணபதி கடவுள்
உறவுக்காரத் திருமால் கடவுள்
உதவியிருக்கிறார்கள் என்று
கதைகள் சொல்கின்றன!

சாதி மத ஆணவக்காரர்களும்
கொண்டாடி வருகிறார்கள்
முருகன் திருக்கல்யாணத்தை!

ஆனால்
ஓங்கிய அரிவாளும், முறுக்கிய மீசையுமாக
நம்மூர்க் கிராமங்களும்
மலேசியா, கரீபியன் தீவுத் தமிழர்களும்
குலதெய்வமாகக் கொண்டாடும் மதுரை வீரன்
சாதி கடந்த திருமணத்திற்காக
மாறுகால் மாறு கை வாங்கப்பட்டவர்!

மதுரை வீரன்
தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த
மாதியச் சின்னான் செல்லிக்குப் பிறந்தவர்.

திருச்சியை ஆட்சி செய்த
பொம்மையா நாயக்கர் மகள் பொம்மி!

வயதுக்கு வந்த பொம்மியை
அக்கால வழக்கப்படி
காட்டில் குடில் அமைத்துக்
காவல் காக்கும் பணி
மதுரை வீரன் அப்பாவுக்கு!
அப்பாவுக்கு உடல்நலம் இல்லை
மதுரை வீரன் காவலில் பொம்மி!
காவல், காதலாகிறது!

யாருக்கும் தெரியாமல்
ஊரைவிட்டு ஓடுகிறார்கள்!
துரத்துகிறது படை!
எதிர்த்து அடிக்கிறது
மதுரை வீரன் கூட்டம்!
வீரத்தைக் கேள்விப்பட்டு
அருகில் வைத்துக்கொள்ள
அழைப்பு விடுக்கிறார் திருமலைநாயக்கர்!

தங்கியிருக்கும் இடத்தில்
மேலும் ஒரு சாதி கடந்த காதல்
வெள்ளையம்மாளுடன்!

சூழ்ச்சி செய்து வரவழைத்து
கோயிலுக்குள்ளேயே மாறுகால் மாறுகை
வெட்டப்படுகிறார் மதுரை வீரன்!
வெட்டியவர்களுக்கு நிலம் வழங்கி
இரத்தப் பட்டயம்!
கோபம் கொண்ட மதுரை மீனாட்சி
கிழக்குக் கோபுர வாசலில்
மதுரை வீரனுக்கு முதல் பூசைக்கு
ஆணையிட்டிருக்கிறார்!

ஒரு பக்கம் பொம்மியும்
மறுபக்கம் வெள்ளையம்மாளுமாக
வேட்டை நாயும் குதிரையும்
காவல் காக்கக் கும்பிடப்படுகிறார்!
ஆண்டுக்கு 5000 பேர்
பலியாகிறார்கள் என்று
எச்சரிக்கிறது ஐ.நா. அறிக்கை!
இந்தியாவில் மட்டும்
கடந்த ஐந்து ஆண்டுகளில்
203 கொலைகள்!

ஆணவக் கொலைகளின் ஆணிவேர்
குடும்பக் கௌரவம் எனும்
சாதி, மதக் கட்டுமானம்!

கௌரவம் வெளிப்படுகிறது ஆணவத்தில்!
ஆணவத்தைக் கொலை செய்யாமல்
ஆணவத்தால் கொலை செய்கிறார்கள்!

நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள் தெரியுமா?
என்று கேட்டதற்குத்
"தெரியுமே! என் மகளை நான்தான்
கழுத்தில் கயிறை மாட்டி இறுக்கிக் கட்டித்
தூக்கில் தொங்கவிட்டேன்" என்று
19 வயது ஐஸ்வரியா கொலை வழக்கில்
அவரது அப்பாவை நீதிமன்றத்திலேயே
சொல்ல வைத்திருக்கிறது சாதி ஆணவம்!
கவின், செல்வ கணேஷ்
விருத்தாச்சலம் கண்ணகி முருகேசன்
உசிலம்பட்டி விமலா தேவி
சூரக்கோட்டை அபிராமி
ஓசூர் நந்தீஸ், சுவாதி
கிருஷ்ணகிரி சுபாஷ் என்று தொடர்கிறது
ஆணவக் கொலைகளின் பட்டியல்!

சட்டப்படி, திருமணத்திற்கு
அடிப்படைத் தகுதி வயது மட்டுமே!
சட்டம் வழங்கியுள்ள உரிமையைச்
சாதி, மதம் மறுக்கலாமா?
ஆதரவாக அதிகார வியாபாரிகள்!
உசிலம்பட்டி விமலாதேவி வழக்கில்
காவல் நிலையத்திலேயே தாக்குதல்!

ஒன்றிய அரசின்
சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை
அறிக்கை சொல்கிறது
தமிழ்நாட்டில் மட்டும்
2020 ஆம் ஆண்டில் 1011 வழக்குகள்
பதிவு செய்யப்பட்டுள்ளதாம்!
தமிழ்நாட்டில்
988 விழிப்புணர்வு முகாம்கள்
நடத்தப்பட்டுள்ளதாகவும்
ஒன்றிய அரசின்
2022 ஆம் ஆண்டு அறிக்கை
குறிப்பிடுகிறது!

கூடவே சமத்துவப் பொங்கல்
சமத்துவபுரம்
கிராமங்களிலும்
சமத்துவ சுடுகாடுகள் என்று
விழிப்புணர்வை மக்களிடம் விதைக்க
இந்தியாவிற்கே வழிகாட்டும்
தமிழ்நாடு அரசின்
முன்னோடித் திட்டங்கள்!

இப்படி
வாக்காளர்களைத் திருத்தும்
வழிவகை பற்றிக்
கவலைப்படாமல்
வாக்காளர் திருத்தம் போன்ற
அதிகார வழிப்பறிகள்!



**அன்புடன்**
**ம.ரா.**

நன்றி:
'கணையாழி'
நவம்பர் – 2025



தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் சாக்கோட்டை முதல் மன்னார்குடி வரை, சென்னை கன்னியாகுமரி தொழில் வட திட்ட அழகு தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்கள் ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதி உதவியுடன் ரூ.197. 701 கோடி மதிப்பீட்டில் இருவழி சாலையாக அகலப்படுத்தி, மேம்படுத்தப்பட்ட சாலையை முதல்வர் மு. க. ஸ்டாலின் காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இதையடுத்து சாக்கோட்டையில் நடந்த விழாவில் உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன், தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, முன்னாள் எம்.பி. செ.இராமலிங்கம், சப் கலெக்டர் ஹிருத்யா கே விஜயன் ஆகியோர் தொடங்கி வைத்தனர். இதில் மாநகர மேயர் க.சரவணன், நெடுஞ்சாலைத் துறை தஞ்சை வட்ட கண்காணிப்பு பொறியாளர் பாலசுப்பிரமணியன், குடந்தை கோட்ட பொறியாளர் செந்தில் தம்பி, சென்னை கன்னியாகுமரி தொழில் வழி திட்ட குடந்தை கோட்ட பொறியாளர் லட்சுமி நாதன், உதவி கோட்ட பொறியாளர் சிவராஜ், உதவி கோட்ட பொறியாளர் நிரஞ்சனா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.